THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W. 1)**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 16.03.2023. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 29/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமாரம்மாள் | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா.1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

பெருமாள் நாயக்கர் மனைவி பூச்சம்மாள் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பூச்சம்மாள் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பெருமாள் நாயக்கர் மனைவி பூச்சம்மாள் மற்றும் நான்கு நபர்கள் சேர்ந்து செல்லம் என்பவருக்கு எழுதிகொடுத்த பொது அதிகார ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**15.07.2010 ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல்

செய்கிறேன். (**16.05.2013ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பெருமாள் நாயக்கர் மனைவி பூச்சம்மாள் என்பவர் கிரைய தொகையை பெற்றுக்கொண்டதற்கான ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**16.05.2013ம் தேதியிட்ட ரொக்க ரசீது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**19.04.2000ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**18.01.2022ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)